முதன்மை சார்பு நீதிமன்றம், தென்காசி

முன்னிலை.திரு.என். மணிவண்ணன்., பி.ஏ, பி.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி

2014-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22- ம் புதன்கிழமை

<u>அசல் வழக்கு எண்.121/2012</u>

பாதுஷா. .. வாதி

/எதிர்/

பகவதி .. பிரதிவாதி.

இவ்வழக்கானது 10.10.2013 - அன்று என்முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தப்போது வாதி தரப்பில் தரப்பில் திருவாளர்கள்.பி.முருகேசன், டி.ரேவதி, இ.ராஜா, வழக்கறிஞர்களும் பிரதிவாதி தரப்பில் திரு.ஆர்.சரவணன் வழக்கறிஞரும், முன்னிலையாகியும், இவர்களது வாதுரைகளைக் கேட்டும், சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை எனது பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

WEB COPY

<u>தீர்ப்புரை</u>

வாதிக்கு, பிரதிவாதியிடமிருந்து ரூ.5,10,533/-ம், அதற்கு பின்வட்டியும், வழக்கு செலவுத்தொகையும் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2.வழக்குரையின் சுருக்கம்:</u> வாதியிடம் பிரதிவாதி அவசர குடும்ப செலவு வகைக்காகவும், சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும் ரூ.4,00,000/-ம் கடன்கேட்டு மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ஒரு ரூபாய் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு மேற்படி வட்டியையும், அசலையும் வாதியிடமோ, வாதியின் அதிகாரம் பெற்றவரிடமோ செலுத்துவதாக ஒப்புக்கொண்டு 10.01.2010- அன்று ஒரு புரோநோட்டு ஒன்றை எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி அசல் தொகைக்கு வட்டியோ, அசலோ செலுத்தவில்லை என்பதால் வாதி, பிரதிவாதியிடம் நேரிலும் வகையாட்கள் மூலமாகவும் கேட்டு வருவதில் தருவதாக கூறி நாள்கடத்தி வந்தர். இதனால் வாதி 17.04.2012- அன்று வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றை அனுப்பினார். அதை பிரதிவாதி பெற்றுக்கொண்டு எவ்வித பதிலும் தெரிவிக்கவில்லை என்பதால் மேற்படி தொகையை வசூல் செய்து தரக்கோரி வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. எதிர்வழக்குரையின் சுருக்கம் :</u> வாதியின் வழக்கு நிலைக்கத் தக்கதில்லை. பிரதிவாதி, வாதியிடம் 10.10.2010- தேதியிலோ, அல்லது வேறு எந்த தேதியிலோ எந்த தொகையும் பெற்றதில்லை. வாதியிடம் பெற்ற கடன் தொகைக்கு யாதாரு கடனுறுதி சீட்டும் எழுதிக் கொடுக்கவில்லை. மேற்படி கடனுறுதி சீட்டு வாதியால் உற்பத்தி செய்யப்பட்டவையாகும். வாதியை இந்த பிரதிவாதிக்கு யார் என்று தெரியாது. வாதியால் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்ட விசயம் உண்மை. வாதியிடம் பிரதிவாதி எவ்வித தொகையும் பெறவில்லை என்பதால் பதில் அறிவிப்பு அனுப்பப்படவில்லை. வாதியைப் போலவே, கோபாலகிருஷ்ணன் என்பவரும் பிரதிவாதி மீது அ.வ எண். 60/2009- என்ற வழக்கை தாகக்ல் செய்து தீர்ப்பாணை பெற்றுள்ளார். அவர் தூண்டுதலின் பேரில் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

4. வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து வழக்கின் தீர்விற்காக கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

1. தாவா புரோநோட்டு உற்பத்தி செய்யப்பட்டதா?
2. பிரதிவாதியிடமிருந்து வாதி ரூ.5,10,533/-ம் அதற்கு பின்வட்டியும் பெற உரிமை உடையவரா?
3. வாதிக்கு கிடைக்ககூடிய இதர பரிகாரங்கள் என்ன?

5.வாதி தரப்பில் வா.சா.1,2 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 3 குறியிடப் பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1- விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் எதுவும் குறியிடப்படவில்லை.

<u>6.எழுவினாக்கள் 1 மற்றும் 2-க்கான தீர்வு:</u> வாதி தரப்பில் இந்த பிரதிவாதி அவரது குடும்ப செலவுக்காக வாதியிடம் ரூ.4,00,000/-ம் கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக வா.சாஆ.1. கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்ததாகவும், பலமுறை மேற்படி அசல் மற்றும் வட்டித்தொகையை நேரிடையாக கேட்டபோதும் வீண் காலதாமதம் செய்து வந்தார் என்றும், வா.சாஆ.2 அறிவிப்புக்கு பிறகும் பிரதிவாதி தொகை எதுவும் செலுத்தவில்லை என்றும், வாதுரைக்கப்பட்டது. ஆனால், பிரதிவாதி தரப்பில், இந்த வழக்கு நிலைக்கத் தக்கதில்லை என்றும்,. இந்த பிரதிவாதி 10.01.2010 அன்றோ

அல்லது வேறு எந்த தேதியிலோ வாதியிடம் எந்த தொகையும் பெறவில்லை என்றும், அது வழக்குரையில் குறிப்பிட்டுள்ள்வாறு இந்த பிரதிவாதிக்கு அவசர குடும்ப செலவு எதுவும் ஏற்பட்டிருப்பது இல்லை என்றும், 10.01.2010 அன்று இந்த பிரதிவாதி வாதியிடம் ரூ.4,00,000/-ம் பெற்றுக்கொண்டு அதற்கு ஆண்டு ஒன்றுக்கு 12%வட்டி தருவாக ஒப்புக்கொண்டு கடனுறுதி சீட்டு பிறப்பித்து கொடுத்தார் எனற கூறுவது உண்மையில்லை என்றும் வாதுரைக்கப்பட்டது.

7.வாதி தரப்பில் இந்த பிரதிவாதி வா.சா.ஆ.1. கடனுறுதி சீட்டின் அடிப்படையில் பிரதிவாதி தன்னிடம் ரூ.4,00,000/-ம் கடனாக பெற்றுக்கொண்டதாக முன்னுரைக்கப்பட்டுள்ள நிலையில் அந்த சங்கதிகள் பிரதிவாதி தரப்பில் மறுத்துரைக்கப் பட்டுள்ளது. எனவே, அதை நிருபிக்க வேண்டிய பொறுப்பு வாதி தரப்புக்கு உள்ளது. வா.சா.1. அவரது சாட்சியத்தின் முதல் விசாரணையில்,

> இந்த பிரதிவாதி 10.01.2010 அன்று கிருஷ்ணாபுரத்தில் வைத்து ரூ.4,00,000/-ம் கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்ததாக

WEB COPY

சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், பிரதிவாதி தரப்பில் மேற்படி கடன்தொகை கொடுப்பதற்கு இந்த வாதிக்கு போதிய வருமானம் இல்லை என்றும், அந்த கடன் தொகையை கொடுக்க கூடிய அளவுக்கு வசதி இல்லை என்றும் வாதுரைக்கப்பட்டது. வா.சா.1. அவரது சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில்,

> வாதிக்கு ஊதியமான மாதம் ஒன்றுக்கு ரூ.2500/-ல் இருந்து ரூ.3000/-ம் வரை வருமானம் கிடைக்குமா என்றால் சில சமயம் கூடுதலாக கிடைக்கும், ஆனால் மாதம் குறிப்பிட்ட தொகை தொகை கிடைக்கும் என்று

அறுதியிட்டு சாட்சியம் அளித்துள்ளார் என்றும், இந்த பிரதிவாதி சத்துணவுக் கூடத்தில் ஆயா வேலை பார்த்து மாதம் ஒன்றுக்கு மாதம் ரூ.7000/-த்தில் இருந்து ரூ.8000/-ம் சம்பளம் பெற்று வருவதாகவும், பிரதிவாதியின் கணவர் வேலை பார்த்து ரூ.15,000/-ம் சம்பாதித்து வருவதாகவும் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், இந்நிலையில் மிக குறைந்த மாதவருமானம் உள்ள இந்த வாதி, பிரதிவாதிக்கு கடன் கொடுத்திருக்க இயலாது என்றும்

வாதுரைக்கப்பட்டது. மேலும், பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.1. கடனுறுதி சீட்டு இந்த வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ள நிலையில் அதை கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்பதவதற்கு வாதி தரப்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும்,எனவே, இதுபோன்ற சூழ்நிலையில் வாதிக்கு எதிரான இந்த வழக்கு அனுமானிக்கப்பட வேண்டுமென்றும் வாதுரைக்கப்பட்டது. அதற்கு ஆதரவாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு ஆதாரம் 2008 வால்யூம். 2 சி.டி.சி. பக்கம் 580- முன்னிலைப்படுத்தப் பட்டது. மேற்கண்ட தீர்ப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் சாட்சிய சட்டப்பிரிவு 73-ன் கீழ் ஒரு ஆவணத்தின் நம்பக தன்மை குறித்தும் அது உண்மையானதா? என்ற சங்கதி குறித்தும் ஆராய்வதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்றம் ஆனால், ஒரு அவணம் பொய்யானது என்ற நிலைப்பாட்டை எதிர் தரப்பினர் எடுக்கும் நிலையில் அதை உரிய நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்பி அந்த அறிக்கையின் அடிப்படையில் தீர்மானிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது.மேற்கண்ட தீர்ப்புரை சம்பந்தப்பட்ட வழக்கு ஒரு குறிப்பிட்டஆவணத்தில் எழுதப்பட்ட எண்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ள நிலையில் அந்த வழக்கில் கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு மேற்படி ஆவணம் அனுப்பப்பட வேண்டுமென்று இடையீட்டு மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் அந்த மனு விசாரணை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் அந்த உத்தரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தீர்ப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 2005 (2) சி.டி.சி. பக்கம் 445 தீர்ப்புரை மேற்கோள்காட்டி உள்ளது. மேற்படி தீர்ப்பில் விசாரணை நீதிமன்றம் ஒரு தரப்பினரால் மறுக்கப்படும் ஆவணத்தையும் இரு தரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணத்தில் உள்ள கையெழுத்தையும் பரிசோதனை செய்ய வேண்டுமென்றும், அதுபோல் பரிசோதனை செய்து ஒரு முடிவு எடுக்கப்படாத சூழ்நிலை ஏற்படுமாயின் விசாரணை நீதிமன்றம் அந்த வழக்கின் மனுதாரரை உரிய மனு தாக்கல் செய்ய அறிவுறுத்தி அதன் அடிப்படையில் மேற்படி ஆவணம் கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்பப்பட வேண்டுமென்றும், குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதி

WEB COPY

தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு ஆதாரத்தில் ஒரு ஆவணம் என்ன நடைமுறையின் அடிப்படையில் கையெழுத்து நிபுணர் பரிசோதனைக்கு அனுப்பப்பட வேண்டுமென்று வழிகாட்டுதலும் நெறி முறைகளும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தீர்வுக்குரிய இந்த வழக்கில் இருதரப்பிலும் மேற்படி ஆவணத்தை கையெத்து நிபுணரின் ஆய்வுக்கு அனுப்ப மனுத் தாக்கல் செய்யாத நிலையில் பிரதிவாதி தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு ஆதாரம் இந்த வழக்கு சங்கதிகளுக்கு பொருந்தக்கூடியதாக இல்லை.

8. மேலும், பிரதிவாதி தரப்பில் தமது வாதுரைக்கு ஆதரவாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு ஆதாரம் 2009 (5) லா வீக்கிலி பக்கம் 271 முன்னிலப் படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட தீர்ப்பிலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஒரு குறிப்பிட்ட ஆவணத்தில் உள்ள கையெழுத்து ஒரு தரப்பினரால் மறுக்கப்படும் நிலையில் அந்த ஆவணம் கையெழுத்து நிபுணரின் ஆய்வுக்கு அனுப்பப்பட வேண்டுமென்று தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தீர்வுக்குரிய இந்த வழக்கில் இருதரப்பிலும் அதுபோன்ற மனு எதுவும் தாக்கல் செய்யாத நிலையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு ஆதாரம் இந்த வழக்கு சங்கதிகளுக்கு பொருந்தக்கூடியதாக இல்லை.

WEB COPY

9. பிரதிவாதி தரப்பில் தீர்வுக்குரிய இந்த வழக்கில் வா.சா.ஆ.1. ஆவணம் இந்த வழக்கிற்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டதென எதிர்வழக்குரையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மேற்படி ஆவணத்தை கையெழுத்து நிபுணரின் ஆய்வுக்கு அனுப்ப வாதி தரப்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், இது போன்ற சூழ்நிலையில் வாதிக்கு எதிராக நிலைப்பாட்டை நீதிமன்றம் எடுக்க வேண்டுமென்றம் வாதுரைக்கப்பட்டது. அதற்கு ஆதரவாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு ஆதாரம் 2006 (4) சி.டி.சி. பக்கம் 850 முன்னிலைப்படுத்தப் பட்டது. மேற்கண்ட தீர்ப்புரை சம்பந்தப்பட்ட வழக்கில் பிரதிவாதி வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்தை மறுத்துள்ள நிலையில் அந்த ஆவணத்தை கையெழுத்து நிபுணரின் ஆய்வுக்கு அனுப்ப வேண்டுமென்று

பிரதிவாதி மனு செய்து அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டதன் பேரில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தீர்ப்புரையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்யப்பட்ட விசாரணை நீதிமன்ற உத்தரவை உறுதி செய்து சீராய்வு மனுவை தள்ளுபடி செய்துள்ளது. மேற்கண்ட தீர்ப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம்,

> Moreover as rightly pointed out by the trial court when the signature in the sale agreement dated 15.02.1994 is disputed as forged by the defendant, it is for the plaintiff who vouches for the genuineness of the document to take steps to send the document for getting the opinion of the handwriting expert to prove his case. Further the opinion of the handwriting expert alone is not the deciding factor in finding out the genuineness of the sale agreement dated 15.02.1994 and the same could be tested by examining the attesting witnesses and also in some other modes and it is the duty of the plaintiff to establish his case by letting in sufficient oral and documentary evidence.

WEB COPY

என்றும் தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தீர்ப்பின் அடிப்படையில் வா.சா.ஆ.1. ஆவணத்தை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதி தரப்புக்கு உள்ள நிலையில் அந்த ஆவணம் கையெழுத்து நிபுணரின் ஆவணமூலம் மட்டுமே நிருபிக்கப் படவேண்டுமென்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்படவில்லை. எனவே, வா.சா.ஆ1. கடனுறுதி சீட்டு கையெழுத்து நிபுணரின் ஆய்வுக்கு அனுப்பப் பட்டிருக்க வேண்டுமென்ற பிரதிவாதி தரப்பு வாதம் இந்த நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

10.தீர்வுக்குரிய இந்த வழக்கில் வாதி தரப்பில் வா.சா.ஆ.1. ஆவணம் உண்மையானது என்று நிருபிக்க வேண்டிய பொறுப்பு உள்ள நிலையில் அதில் சாட்சி கையெழுத்திட்ட நபர் வா.சா.2-ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.2. அவரதுசாட்சியத்தில்,

10.01.2010 அன்று இந்த பிரதிவாதி, வாதியிடம் ரூ.4,00,000/-ம் கடனாக பெற்றுக்கொண்டு கடனுறதி சீட்டு எழுதிக் கொடுத்ததாகவும் அந்த ஆவணத்தை தான் எழுதி சாட்சி கையெழுத்திட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.2.ன் குறுக்கு விசாரணை மற்றும் முதல் விசாரணை சங்கதிகள் பொய்யானது என்று அனுமானிக்கும் வகையில் எந்த சங்கதிகளையும் சாட்சியமாக அளிக்கவில்லை. வா.சா.ஆ.1. ஆவணத்தில் சாட்சி கைழெுத்திட்டுள்ள வா.சா.2. தெளிவாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் வா.சா.ஆ.1. தேதியில் இந்த பிரதிவாதி, வாதியிடம் ரூ.4,00,000/-ம் கடனாக பெற்றுள்ளார் என்று வா.சா.1-ம் தெளிவாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் வா.சா.ஆ.1. ஆவணம் உரிய முறையில் வாதி தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆனால், பிரதிவாதி தரப்பில் மேற்படி கடன் கொடுப்பதற்கு வாதிக்கு போதிய வசதி இல்லாத நிலையில் பிரதிவாதிக்கு தாவா தொகையான ரூ.4,00,000/-த்தை கடனாக பெறுவதற்கு அவசியம் இல்லாத நிலையில் இந்த பிரதிவாதி, வாதியிடம் ரூ.4,00,000/-ம் கடனாக பெற்றுக்கொண்டு கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்திருப்பதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று வாதுரைக்கப்பட்டுள்ளது. மேலும், பிரதிவாதி தரப்பில் இந்தவாதி மாத வருமானம் மிக குறைவாக உள்ளது என்று வாதியே அவரது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அதிக வருமானம் இல்லாத ஒரு நபர் தாவா தொகையை கடனாக கொடுத்திருக்க இயலாது என்று வாதுரைக்கப்பட்டது. தீர்வுக்குரிய இந்தவழக்கில் வா.சா.ஆ.1. கடனுறுதி சீட்டுப்படி இந்த பிரதிவாதி ரூ.4,00,000/-ம் கடனாக பெற்றதாக முன்னுரைக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையை கொடுப்பதற்கு வாதிக்கு வசதி உள்ளதா? என்று இந்த நீதிமன்றம் விடைகாண வேண்டிய அவசியம் இல்லை. வா.சா.ஆ.1. கடனுறுதி சிட்டு உரிய மறுபயனுடன் எழுதப்பட்டுள்ளதா? என்ற சங்கதி மட்டுமே இந்த வழக்கில் தீர்மானிக்கப் படவேண்டும். அதுபோல் அல்லாமல் வாதிக்கு போதிய வசதி உள்ளதா அல்லது பிரதிவாதிக்கு கடன் வாங்குவதற்கு அவசியம் உள்ளதா என்பது குறித்து தீர்வு காண இயலாது. இந்த பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.1. கடனுறுதி சீட்டு உண்மையானது என்று நிருபிக்க வேண்டிய பொறுப்பு வாதி தரப்புக்கு உள்ள நிலையில் அதை நிருபிக்கும் வகையில்

WEB COPY

உரிய சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்று வாதுரைக்கப்பட்டது. அவரது வாதுரைக்கு ஆதரவாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு ஆதாரம் 2011 சிவில் எம்.டபிள்யூ. என். பக்கம் 611- முன்னிலைப்படுத்தப்பட்டது. மேற்கண்ட தீர்ப்புரை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஒரு கடனுறுதி சீட்டு பொய்யானது என்று பிரதிவாதி தரப்பில் மறுக்கப்பட்டுள்ள நிலையில் அதை நிருபிக்க வேண்டிய பொறுப்பு வாதி தரப்புக்கு உள்ளது என்று தீர்ப்புரைவழங்கப் பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.1. கடனுறுதி சீட்டு உண்மையானது என்று நிருபிக்கும் வகையில் வாதி தரபபில் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு நிலைக்கத் தக்கதில்லை என்று வாதுரைக்கப் பட்டது. தீர்வுக்குரிய இந்த வழக்கில் வா.சா.ஆ.1. கடனுறுதி சீட்டு உண்மையானது என்று நிருபிக்க வேண்டிய பொறுப்பு வாதி தரப்புக்கு உள்ளது. வா.சா.ஆ.1.எழுதிய அதில் சாட்சி கையெழுத்திட்டுள்ள வா.சா.2. சாட்சியத்தின் மூலம் வா.சா.ஆ.1. கடனுறுதி சீட்டு நிருபிக்கப்பட்டுள்ளது. மேலும், பி.சா.1. அவரது சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் வா.சா.ஆ.1. கடனுறுதி சீட்டை தற்போதுதான் பார்ப்பதாகவும், இதற்கு முன்பு பார்க்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், எதிர்வழக்குரையில், வா.சா.ஆ.1. கடனுறுதி சீட்டு தன்னால் எழுதிக் கொடுக்கப்பட வில்லை என்றும் குறிப்பிப்பட்டுள்ளது. எனவே, வா.சா.ஆ.1. கடனுறுதி சீட்டை பார்க்காமலே இந்த பிரதிவாதி மேற்படி ஆவணம் பொய்யானது என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார் என்ற சங்கதி தெரியவருகிறது.

11. மேலும், வா.சா.ஆ.1. எழுதப்பட்ட காலமான 2009-ம் வருடத்தில் உள்ள உண்மையான கையெழுத்தை நிருபிக்கும் வகையில் ஆவணம் உள்ளதாகவும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, வா.சா.ஆ.1. ஆவணத்தில் உள்ள கையெழுத்து இந்த பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்று நிருபிக்கும் வகையில் ஆவணங்கள் உள்ள நிலையில் அந்த ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக இந்த பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2.

WEB COPY

அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான ஆதரவாக வா.சா.ஆ.3 ஒப்புகை அட்டை குறியிடப்பட்டுள்ள்து. ஆனால், அந்த அறிவிப்புக்கு பிரதிவாதி தரப்பில் எந்த பதில் அறிவிப்பும் அனுப்பப் படவில்லை. பி.சா.1. அவரதுசாட்சியத்தில், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ஒரு அறிவிப்பு வந்தது என்றும், அறிவிப்பில் கண்டபடி வாதியை தனக்கு தெரியாது என்றும், வாதியை தெரியாததாலும், அந்த நபரிடம் பணம் எதுவும் பெறாததாலும் அதற்கு பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஒரு குறிப்பிட்ட அறிவிப்பை மறுத்து பதில் அறிவிப்பு அனுப்பாததாலே அந்த அறிவிப்பில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானது என்று அனுமானிக்க இயலாது என்றும், பிரதிவாதி தரப்பில் வாதுரைக்கப்பட்டது. அதற்குஆதரவாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு ஆதாரம் 2008 (8) எம்.எல்.ஜே. பக்கம் 862 மற்றும் 1997 (2) சிவில் கோர்ட் பக்கம் 402- முன்னிலைப் படுத்தப்பட்டது. மேற்கண்ட தீர்ப்புரைகளில் ஒரு பதில் அறிவிப்பு அனுப்பாததாலே அந்த அறிவிப்பில் உள்ள சங்கதிகள் உண்மையானது என்று அனுமானிக்க இயலாது என்று தீர்ப்புரை வழங்கப் பட்டுள்ளது. தீர்வுக்குரிய இந்தவழக்கில் வா.சா.ஆ.2 அறிவிப்புக்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பாததாலே வா.சா.ஆ.1. கடனுறுதி சீட்டு உண்மையானது என்று தீர்வு காண இயலாது. ஆனால், வா.சா.ஆ.1. கடனுறுதி சீட்டில் சாட்சி கையெழுத்திட்ட வா.சா.2. சாட்சியத்தின் மூலம் வா.சா.ஆ.1. ஆவணம் நிருபிக்கப் பட்டுள்ள நிலையில் பிரதிவாதி தரப்பு வாதம் இந்த நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

12. இந்த பிரதிவாதி தரப்பில் வழக்குரையில் குறிப்பிடப்படாத சங்கதியை தவிர்த்து புதிய சங்கதிகளை வாதிசாட்சியமாக அளித்துள்ளார் என்றும் அது ஏற்கத் தக்கதில்லை என்றும் வாதுரைக்கப்பட்டது. அதற்கு ஆதரவாக மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பு ஆதாரம் 2011 (2) சிவில் கோர்ட் பக்கம் 1- மற்றும் 2012 (3) சி.சி.சி. பக்கம் 577- முன்னிலைப்படுத்தப்பட்டது. தீர்வுக்குரிய இந்த வழக்கில் தாக்கல் செய்யப் பட்டுள்ள வழக்குரையில் இந்த பிரதிவாதி தனது குடும்ப செலவுக்காக ரூ.4,00,000/-ம் கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு 1% வட்டி சேர்த்து

WEB COPY

கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ஒரு கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்ததாக குறிப்பிடப் பட்டுள்ளது. வா.சா.1. அவரது சாட்சியத்தில், மேற்படி கடனுறதி சீட்டு கிருஷ்ணாபுரத்தில் வைத்து எழுதப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்குரையில் எந்த ஊரில் வைத்து எழுதப்பட்டது என்று குறிப்பிடப்படாத நிலையில் சாட்சியத்தில் மேற்படி கடனுறுதி சீட்டு எங்கு வைத்து எழுதப்பட்டது என்று குறிப்பிட்டுள்ள சங்கதி புதிய சங்கதி என்று பொருள் காண இயலாது. மேலும், வழக்குரை சங்கதிகளை தவிர்த்து கூடுதலாகவோ அல்லது புதிதாகவோ சங்கதிகள் சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூற இயலாது. ஏனெனில், கடனுறுதி சீட்டு எந்த ஊரில் வைத்துஎழுதப்பட்டது என்று வழக்குரையில் குறிப்பிடாத நிலையில் அந்த விவரத்தை மட்டும் சாட்சியத்தில், குறிப்பிடாததால் அந்த சாட்சிய சங்கதி வழக்குரை சங்கதிகளுக்கு முற்றிலும் புதிதானது என்று பொருள் காண இயலாது. எனவே, வாதி தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பு ஆதாரங்கள் இந்த வழக்கு சங்கதிகளுக்கு பொருந்தக்கூடியதாக இல்லை.

WEB COPY

13. பிரதிவாதி தரப்பில் வா.சா.1, வா.சா.2.-க்கு நெருங்கிய உறவினர் என்றும், எனவே, உறவினர் என்ற முறையில் வா.சா.1-க்கு ஆதரவாக வா.சா.2. சாட்சியம் அளித்துள்ளார் என்றும் வாதுரைக்கப்பட்டது. வா.சா.2. சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் இந்த வாதி தனது உடன்பிறந்த சகோதரர் என்ற சங்கதியை ஒப்புக் கொண்டுள்ளார். ஒருநபர் நெருங்கிய உறவினர் என்பதால் மட்டுமே உறவினருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறார் என்று அனுமானிக்க இயலாது. மேற்படி சாட்சி, வாதிக்கு அதரவாக பொய் சாட்சி சொல்கிறார் என்று நிருபிக்கும் வகையில் பிரதிவாதி தரப்பில் உரிய சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தப்படாத நிலையில் பிரதிவாதி தரப்பு இந்த வாதம் ஏற்கத்தக்கதாக இல்லை. மேலும், பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.1. தேதியில் வாதியிடம் ரூ.4,00,000/-ம் இருந்தது என்பதை நிருபிக்கும் வகையில் உரிய ஆவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்றும் வாதுரைக்கப்பட்டது. வா.சா.1. சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் 10.01.2010-அன்று தன்னிடம் ரூ.4,00,000/-ம் இருந்தது என்பதறகு ஆதரவு எதுவும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அந்த தேதியில் கடன் கொடுப்பதற்கு

வாதிக்கு போதிய வசதி இல்லை என்றும், பிரதிவாதி தரப்பில் வாதுரைக்கப்பட்டது. முன்கண்ட பத்திகளில் கடனுறுதி சீட்டு அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில் மேற்படி கடனுறுதி சிட்டுபடி கடன்தொகைகொடுப்பதற்கு போதிய தொகை வாதியிடம் உள்ளதா? என்று வாதி தரப்பில் நிருபிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. கடனுறுதி சீட்டு உரிய பிரதிபலனுடன் எழுதப் பட்டுள்ளதா? உண்மையானதா? என்று நிருபிக்க வேண்டிய பொறுப்பு மட்டுமே வாதி தரப்புக்கு உள்ளது. வாதி தரப்பில் வா.சா.1,2- சாட்சிகள் மூலம் வா.சா.ஆ.1. கடனுறுதி சீட்டு நிருபிக்கப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதி தரப்பு இந்த வாதம் இந்த நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. வா.சா.ஆ.1. கடனுறுதி சீட்டு உரிய சாட்சிகள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ள நிலையில் வா.சா.ஆ.1.கடனுறுதி சீட்டு உண்மையானது என்றும், பிரதிவாதி தாவா தொகையை பின் வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் சேர்த்து செலுத்த கடமைப்பட்டவர் என்றும் எழுவினாக்கள் 1 மற்றும் 2-க்கு தீர்வு காணப்படுகிறது.

WEB COPY

<u>14. எழுவினா 3-க்கான தீர்வு:</u> வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் வாதிக்கு இதர பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதில்லை என்று எழுவினா 3-க்கு தீர்வு காணப்படுகிறது.

15. முடிவில், வாதிக்கு, பிரதிவாதி ரூ.5,10,533/-ம் அதில் அசல் தொகை ரூ.4,00,000/-க்கு பிராது தேதி முதல் தொகை வசூலாகும் நாள்வரை 6% பின்வட்டியும், வழக்கு செலவுத்தொகையும் செலுத்தவேண்டுமென வழக்கை அனுமதித்து தீர்ப்பளிக்கப் படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2014 ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி
தென்காசி.

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

1.10.01.2010- வாதிக்கு, பகவதி ரூ.4,00,000/-க்கு எழுதிக்கொடுத்த புரோநோட்டு அசல்.

2. -- - வழக்கறிஞர் அறிவிப்பு

3. -- - ஒப்புதல் அட்டை

பிரதிவாதி தரப்பு சான்றாவணம்:இல்லை.

வாதி தரப்பு சாட்சி.

1.திரு.பாதுஷா

2.திரு. முகைதீன்.

பிரதிவாதி தரப்பு சாட்சி.

1.திருமதி. பகவதி.

WEB COPY

மு.சா.நீ.
தென்காசி.

மு.சா.நீ. தென்காசி.
அ.வ.எண்.121/2012
தீர்ப்புரை-வரைவு/நேரிய
நாள்.22.01.2014..